பெரிய தபாற் கந்தோரில் புதினப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டிருக்கிறது

# ஸ்ரீ லங்கா

தகவற்பகுதியின் வாராந்தப் பத்திரிகை

மலர்: 7 | 1963, யூன் 12ந் திகதி | இதழ்: 12

# சௌக்கிய வாரச் செய்தி

## அமைச்சர் ஜனாப் பதியுத்தீன் மஹ்மூத் விடுத்தது

**ஜூன் மாதம் 10ந் திகதி தொடக்கம் 16ம் திகதி வரை நடைபெறும் "மக்கள் சௌக்கிய வார"த்தை யொட்டி சௌக்கிய அமைச்சர் ஜனாப் பதியுத்தீன் மஹ்மூத் பின்வரும் செய்தியை விடுத்துள்ளார்:—**

**இவ்வாண்டு மக்கள் சௌக்கிய வாரம் ஜூன் மாதம் 10ந் திகதி தொடக்கம் 16ந் திகதி வரை இலங்கை பூராவும் கொண்டாடப்படும். நாட்டை எதிர் நோக்கியிருக்கும் சௌக்கிய பிரச்னைகளைப்பற்றிய விழிப்புணர்ச்சியை மக்களுக்கிடையில் ஏற்படுத்தி இப்பிரச்னைகளைத் தீர்த்து வைப்பதில் அவர்களின் தீவிர ஆதரவையும் ஒத்துழைப்பையும் பெறுவதே "சௌக்கிய வார"த்தின் பிரதான நோக்கமாகும்.**

மக்களின் சௌக்கியத்தைப் பேணிப் பாதுகாப்பதில் கடந்த சில ஆண்டுகளில் இப்படிப்பட்ட முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. இம்முன்னேற்றத்தில் சிசுக்கள், தாய்மார்களின் மரண விகிதமும் பொதுவாக மரண விகிதமும் குறைந்திருப்பது சௌக்கியத் துறையில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தை எடுத்துக்காட்டும் முக்கிய புள்ளி விவரங்களாகும். 1953 ம் ஆண்டில் உயிருடன் பிறந்த 1,000 பிள்ளைகளில் 71 பிள்ளைகள் வீதம் இறந்தன. 1961 ல் இது ஆயிரத்துக்கு 52 ஆகக் குறைந்து காணப்பட்டது. இன்று ஆயிரத்துக்கு 8·0 ஆகக் காணப்படும் பொது மரண விகிதம் மேற்கத்திய நாடுகளின் மரண விகிதத்துடன் ஒப்பிடக் கூடிய அளவில் உள்ளது.

அரசாங்கமும் மக்களும் கூட்டாக செயலாற்றியதனாலேயே சௌக்கியத்துறையில் கடந்த சில ஆண்டுகளில் இவ்வித முன்னேற்றத்தை ஈட்டிக்கொள்ள முடிந்தது. கடந்த 1961/62 நிதி வருடத்தில் சௌக்கிய சேவைகளை நன்னிலையில் வைத்திருப்பதற்கும் விஸ்தரிப்பதற்கும் தீவிரப்படுத்துவதற்கும் 14 கோடியே 29 லட்ச ரூபா செலவு செய்யப்பட்டது. இவ்வித வைத்திய வசதிகளை மக்களுக்களிப்பதில் அரசாங்கம் எடுத்துக் கொண்ட முயற்சிகளின் பயனாக தென் கிழக்காசியாவிலேயே மிகவும் அபிவிருத்தியடைந்த சௌக்கிய சேவைகளை நம்நாடு கொண்டிருக்கிறது.

மக்களை எதிர்நோக்கும் சௌக்கியப் பிரச்னைகளை அறிந்திருப்பதிலும் தன்னுதவி அடிப்படையில் அவற்றைத் தீர்க்கத் தயாராக இருப்பதிலுமே நாட்டின் சௌக்கிய வளர்ச்சி தங்கியுள்ளது. இந்நாட்டின் பொதுச் சௌக்கிய சேவை மக்களிடையே சௌக்கியம் சம்பந்தமான எண்ணத்தைப் பரப்பப் பல வருடங்களாக முயன்றுவருகிறது. தங்கள் சௌக்கிய சூழ்நிலைகளைச் சீர்ப்படுத்தும் பொறுப்பு மக்களிடம் ஒப்படைக்கப்பட்டது. நாட்டின் பொது சௌக்கியத்துறையில் பொது மக்கள் சௌக்கிய சூழ்நிலைகளை மேம்படுத்துவதற்கு எடுத்துக் கொண்ட பங்கு குறிப்பிடத்தக்கதாகும். சூழல் சுகாதார அமைப்பின்கீழ், ஒவ்வொரு வருடமும் அண்மையில் நடைபெற்ற சிறுபிள்ளைவாதத் தடுப்பு இயக்கத்தில் ஒரு லட்சம் தொண்டர்களுக்குமேல் உற்சாகத்துடன் பங்குபற்றினர். இவ்வியக்கம் வெற்றிகரமாக வரும் என்பது அரசாங்கத்துக்கு நிச்சயமாகத் தெரியும். தொண்டர்களிடமிருந்து கிடைத்த ஆதரவின் காரணமாகவே இது சாத்தியமாகிறது.

மக்கள் சௌக்கிய வாரம் பெரிதும் ஒரு மக்கள் இயக்கமேயாகும். சௌக்கிய வாரம் முதன் முறையாக 1938 ஆம் ஆண்டில் "மலேரியா வாரம்" என அனுசரிக்கப்பட்டது. யுத்தம் நடைபெற்ற வருடங்களில் தவிர மற்றைய வருடங்கள் எல்லாம் சௌக்கிய வாரம் அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது. சென்ற வருடத்திலிருந்து இத்தகைய கொண்டாட்டங்கள் "மக்கள் சௌக்கிய வாரம்" எனக் கொண்டாடப்படுகிறது. இவ்வருடச் சௌக்கிய வாரத்துக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள விஷயம் "பள்ளிப் பருவம் எய்தாப் பிள்ளையின் சௌக்கியம்" என்பதாகும். இப்பிரிவினுள் அதாவது ஒரு வயதிலிருந்து ஐந்து வயதுக்கு உட்பட்ட பிள்ளைகளை, ஒப்பிட்டு நோக்கும்போது பிள்ளைகள் பிரிவுகளுள் அதிகமாகக் கவனிக்கப்படாது விடப்படுபவர்கள். தொற்று நோய்களுக்கும் வீட்டில் ஏற்படும் விபத்துகளுக்கும் அநேகமாக ஆளாகுபவர்களும் இவ்வயதுக்குட்பட்ட சிறுவர்களேயாவர். இவ்வயதுகளில் தான் குழந்தைகளின் ஆளுமையும் அவர்களது எதிர்கால வாழ்வின் தன்மையும் உருவெடுக்கின்றன.

ஊட்டத்துக்கு விசேட முக்கியத்துவம் கொடுத்து "உலக சௌக்கிய தின"த்தைக் கொண்டாடுதல், ஒட்டு நோய்க் கட்டுப்பாடு, வீட்டு விபத்துக்களைத் தடை செய்தல், பாடசாலை செல்லும் வயது வாராத பிள்ளையின் பல், மன ஆரோக்கிய அம்சங்கள் ஆகியன சௌக்கிய வார நிகழ்ச்சிகளின் இதர பிரதான அம்சங்களாகும்.

உலக சௌக்கிய தினமானது இதர நாடுகளில் ஏப்ரல் மாதம் ஏழாந் திகதியன்று கொண்டாடப்படுகின்றதாயினும் இந்நாட்டில் மக்கள் சௌக்கிய வாரக் கொண்டாட்டங்களின்போதே உலக சௌக்கிய தினம் கொண்டாடப்படுவது வழக்கம். உலக சௌக்கிய தாபனத்துடன் சேர்ந்து இது செய்யப்படுகிறது. இக்கொண்டாட்டங்களில் உலக சௌக்கிய தினக் குறிக்கோளான "லட்சக்கணக்கானோரின் பசிப்பிணி"க்கு விசேட முக்கியத்துவம் அளிக்கப்படும்.

ஆரம்பத்தில் கூறியதைப் போல மக்கள் சௌக்கிய வாரமானது உள்ளூர் தாபனங்களின் பிரதிநிதிகள், இதர அரசாங்கப் பகுதிகளைச் சேர்ந்த உறுப்பினர்கள், கிராமத்தலைவர்கள் ஆகியோரைக் கொண்ட மக்கள் குழுவினால் ஒழுங்கு செய்யப்படுவதாகும்.

அண்மையில், குறிப்பாகத் தென் பிராந்தியத்திலேற்பட்ட வெள்ளப்பெருக்கினால் உண்டான அழிவுகளை நாம் நன்

(3 ம் பக்கம் பார்க்க)

## ஆசிரிய ஆலோசகர் பயிற்சி

### கல்விப் பகுதி நடவடிக்கை

வெகு விரைவில் 14 நிலையங்களில் நடைபெறவிருக்கும் ஆசிரிய ஆலோசகர் தராதரப் பத்திரப் பரீட்சைக்காக 1,500 ஆசிரிய ஆலோசகர்கள் இப்போது கல்விப் பகுதியால் பயிற்சியளிக்கப்பட்டு வருகின்றனர்.

குறிப்புத் தொகுதிகளைத் தயாரித்து வைத்து உபயோகித்தலில் 2,080 ஆசிரியர்கள் ஏற்கனவே தங்கள் பயிற்சியை முடித்துள்ளனர்.

சர்வதேச தொழில் தாபனத்தினால் வெளியிடப்பட்டுள்ள சர்வதேச தொழில் பகுப்புத்தரத்தை அடிப்படையாகக் கொண்டு இலங்கைக்கு ஒரு தொழில் பகுப்புப் பிரமாணத்தை இப்பகுதி திரட்டியுமுள்ளது. இது கல்விப் பகுதியினால் ஆரம்பிக்கப்பட்டு இதர பல அரசாங்க பகுதிகளின் ஒத்துழைப்புடன் பூர்த்திசெய்யப்பட்டது. இவ்வேலை சுமார் 10,000 தொழில் வகைகளை அடக்கியுள்ளது. இத்துடன் அனேக தொழில் தகவல் தாள்கள் தாயரிக்கப்பட்டு பாடசாலைகளுக்கு வழங்கப்பட்டன.

1961 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட தொழில் முறை வழிகாட்டுகை, தொழில் காண் ஆலோசனை ஆகியவற்றின் மேற்படிப்புப் படிப்புத்திட்டம் இப்போது பூர்த்தியடைந்துள்ளது. பாடசாலை அதிபர்கள், சிரேட்ட ஆசிரியர்கள் அரசாங்கப் பகுதி உத்தியோகத்தர்கள் உட்பட 64 பயிற்சி பெறுபவர்கள் இப்பயிற்சிநெறியைப் பூர்த்தி செய்தனர்.

## அஞ்சல் ஊழியர்களுக்கு அமைச்சர் பேட்டி

அகில இலங்கை தபால், தந்தி ஊழியர் சங்கப் பிரதிநிதிக் குழுவொன்று தாங்கள் செய்து கொண்ட முறைப்பாடுகள் தொடர்பாக கௌரவ மராமத்து வேலைகள், தபால் அமைச்சர் திரு. எம். பீ. டீ சற் சிரிவர்தனவை 4.6.63லன்று பேட்டிகண்டது.

பூர்வாங்கப் பேச்சு வார்த்தைகளின் பின்னர் கௌரவ அமைச்சர் சர்வதேச மாநாடொன்றில் தான் இந்நாட்டின் பிரதிநிதியாகப் பங்கு பற்றுவதற்காக வெளிநாடு செல்லவிருப்பதால் அவர்களின் பல்வேறு கோரிக்கைகளை உடனடியாகக் கவனிப்பதற்கு அவகாசம் இல்லாமல் இருப்பதாகவும் தான் இந்நாடு திரும்பியவுடன் இக் கோரிக்கைகள் விருத்தாந்தமாக விவாதிப்பதற்கு மேலும் ஒரு பேட்டியை அளிப்பதாகவும் அவர்களுக்கு உறுதி கூறினர். இந்த யோசனையை சங்கப் பிரதிநிதிகள் ஏற்றுக்கொண்டனர்.

## யூகோவில் நம் இராணுவ அதிகாரிகளுக்குப் பயிற்சி

**(இலங்கை இராணுவத் தளபதி பத்திரிகைகளுக்கு விடுத்துள்ள அறிக்கை)**

இராணுவ உயர் அதிகாரி கர்னல் உடுகமையும் பயிற்சிப் பரிசோதகர் கர்னல் ஆட்டிகலையும் பயிற்சி பெறுவதற்காக யூகொஸ்லாவியாவுக்குப் பிரயாணமானார்களென்று 10.6.63 ல் வெளியான பத்திரிகைகள் பிரசுரித்திருந்தன. இத்தகவலின் உண்மை விவரங்கள் வருமாறு :—

"இராணுவ உயர் அதிகாரி கர்னல் உடுகமையும் பயிற்சிப் பரிசோதகர் கர்னல் ஆட்டிகலையும் யூகொஸ்லாவிய இராணுவத்தில் பயிற்றப்படும் கொறில்லா போர் முறைகள் பற்றியும் ஸ்தாபனம் பற்றியும் கற்றறிந்து கொள்ளும்பொருட்டு மூன்று வார காலம் அந்நாட்டில் சுற்றுப் பிரயாணஞ் செய்தற்காக யூகொஸ்லாவியாவுக்குப் பிரயாணமானர்கள். இலங்கையில் உபயோகப்படக்கூடிய இப்படிப்பட்ட விசேஷ இராணுவ நடவடிக்கைகளில் உத்தியோகத்தர்களுக்குப் பயிற்சியளிப்பதென்ற இலங்கை இராணுவத்தின் பயிற்சியளிக்கும் கொள்கைக்கு இணங்கியதே இது. இவ்வடிப்படையில் காட்டுப் பிரதேசப் போர் முறை மலைப்பிரதேசப் போர் முறை போன்ற விசேஷ போர் முறைகளில் இதற்கு முன்னர் உத்தியோகத்தர்களுக்குப் பயிற்சியளிக்கப்பட்டிருக்கிறது".

# இறைச்சி, பால், முட்டையில் சுயதேவைப் பூர்த்தி

அரிசியையும் மற்றும் உப உணவுப் பொருள்களையும் உற்பத்தி செய்வதில் விவசாயப் பகுதி முழு மூச்சாக வேலை செய்து வந்த போதிலும் அதே போன்ற இன்னொரு தொழில் துறையும் இருக்கிறது. அது பண்ணைத் தொழில். அதிகப்படியான பால், இறைச்சி, முட்டை இவற்றைப் பெறுவதற்கான ஓயாத முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதன் நோக்கம் முக்கியமாக இலங்கை வெளிநாட்டு இறக்குமதிகளில் தங்கியிருப்பதைக் குறைப்பதும், மூலதனப் பொருட்களை வாங்குவதற்கு மிக அவசியமான வெளிநாட்டு செலவாணியை மிச்சப் படுத்துவதுமாகும்.

### அதிர்ஷ்டம்

இலங்கை வருடமொன்றில் பத்துக்கோடி ரூபா பெறுமதியான பால், இறைச்சி, முட்டை ஆகியவற்றை வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்கிறது. ஆனால் ஒன்று இறைச்சி, முட்டை, பால் ஆகியவற்றையும் அவற்றிலிருந்து கிடைக்கக் கூடிய வேறு பொருள்களையும் நாம் இந் நாட்டிலேயே தயாரிக்கலாம். நாம் அதிஷ்டசாலிகள், கால்நடை வளர்ப்புக்கு வாய்ப்பான நிலைமை நம் நாட்டில் இருக்கிறது.

பால், முட்டை, இறைச்சி ஆகியவற்றில் உற்பத்தியைப் பெருக்கும் இயக்கம் பல நோக்குடையதாகும்.

1. பாலைப் பொறுத்த வரையிலும் மற்றும் பால் பொருட்களைப் பொறுத்த வரையிலும் இலங்கை தன்னுடைய சுய தேவையைப் பூர்த்தி செய்யக் கூடிய தாக்குவதும், வருடா வருடம் சுமார் 7 கோடி 10 லட்சம் ரூபா வெளியே போவதை தடுப்பது.

2. இப்போது இலங்கையிலுள்ளவர்கள் நாளொன்றுக்கு ஆக இரண்டு அவுன்ஸ் பாலே சாப்பிடுகிறார்கள். இந்த அளவைக் கூட்டுவது.

3. வளர்ந்து வரும் ஜனத்தொகைக்கு தட்டுப்பாடின்றிப் பால் கிடைக்கச் செய்வதற்கு உற்பத்தியைப் பெருக்குவது.

4. பால் தொழில் அடிப்படையாக வைத்து பலருக்கும் வேலை வாய்ப்பும் வருமானமும் கிடைக்கச் செய்வது.

இறைச்சித் திட்டத்தைப் பொறுத்த வரையில் அதன் நோக்கங்கள் முக்கியமாக இரண்டு எனலாம்.—

1. மாட்டிறைச்சி, ஆட்டிறைச்சி, பன்றி இறைச்சி, கோழி இறைச்சி ஆகியவற்றில் இலங்கையைத் தன் தேவையைப் பூர்த்தி செய்யக் கூடியதாக்கல். இவற்றிற்காக வருடந்தோறும் வெளிநாடு செல்லும் சுமார் 51 லட்சம் ரூபாவை மிச்சப்படுத்துவது.

2. வருடந் தோறும் சுமார் 90 லட்சம் ரூபா பெறுமதியான முள்ளு உரம் ஈரப்பசளை கொழுப்புகள், தோல் பொருட்கள் ஆகியன இறக்குமதி செய்யப்படுவதைத் தடுத்தல்.

### முட்டை

கோழிப் பண்ணைத் திட்டத்தின் நோக்கங்கள் முக்கியமாக மூன்று இருக்கின்றன.—

1. எவ்வளவு தான் ஜனத்தொகை கூடினாலும் முட்டை, சாப்பிடுவது எவ்வளவு தான் அதிகரித்தாலும் குறுகிய காலத்தில் இலங்கை தன்னுடைய சுய தேவையைப் பூர்த்தி செய்யக்கூடியதாக இருக்கும். அதன் பிரகாரம் முட்டை இறக்குமதியை அடியோடு ஒழிப்பது.

2. கோழி வளர்ப்பை முழுநேரத் தொழிலாகவோ அல்லது பகுதி நேரத் தொழிலாகவோ ஆக்கி நாட்டுப் புறமக்களின் உழைப்புச் சக்தியை அதிகரிப்பது.

3. கோழி இறைச்சி வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படுவதைத் தடுப்பது.

இப்படி கால் நடைகளையும் கோழிகளையும் வளர்த்து பண்ணைத் தொழில் அபிவிருத்தி செய்வதென்றால் அதற்குப் போதுமான அளவு மிருக, பறவை வைத்திய சேவையும் திட்டமிடப்பட்ட ஆராய்ச்சி வேலைகளும் நடைபெறவேண்டும்.

### பசு வளர்ப்பு

இலங்கையில் சுமார் 15 லட்சம் பசுக்கள் உள்ளன. முதல் வீச்சல் கன்று ஈன்றதோடு 90 கலன் பாலைத் தான் சிங்களப் பகுதிகளில் உள்ள மாடுகள் தருகின்றன. குறுகிய காலத்தில் ஆகக் கூடுதலான முன்னேற்றம் காண்பதற்கு சிங்கள பகுதிகள் உள்ள நாட்டு பசுக்களோடு வேறு நல்லின காளைகளை நல்லினம் பெருக்கத்துக்காகச் சேரவிட வேண்டியதாக இருக்கிறது. ஜேர்ஸி காளைகள் என்று அழைக்கப்படும் விசேஷமான காளைகள் இதற்கு பாவிக்கப்படுகின்றன. இந்த வகையில் கிடைக்கும் முதலாவது கலப்பு இனப் பசுக்கள் 90 கலனுக்குப் பதிலாக 270 கலனைத் தரலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த ஜேர்ஸி காளைகள் தவிர வேறு நல்ல இனங்களும் செயற்கைக் கருத்தரித்தல் முறைப்படி பரீட்சித்துப்பார்க்கப்படுகிறது. கால் நடை பெருக்கத்துக்கு இப்படியான நடைமுறை உலக மெங்கும் பின்பற்றப்பட்டு வருகிறது.

### கோழி வளர்ப்பு

ஆடு, மாடு போன்ற கால்நடைகளைவிட கோழிகளின் ஆயுட்காலம் குறைவு. அதனால் கோழிகளின் எண்ணிக்கையை விரைவில் பெருக்கலாம். குறைந்த மூலத்தனத்தோடு அவற்றை வாங்கிக் கொள்ளலாம். விஸ்திரமான இடம் தேவையில்லை. எங்கும் கோழிகளை வைத்து வளர்க்கலாம்.

கோழி வளர்ப்பை அபிவிருத்தி செய்ய விவசாய இலாகா மேற்கொண்ட நடவடிக்கைகள் குறிப்பாக ஐந்து வகையானவை.—

1. அந்நிய நாட்டு உயர்ந்த இனக் கோழிக் குஞ்சுகளை விநியோகித்தது.

2. நல்ல இனத்தைச் சேர்ந்த சேவல்களை விநியோகித்தது.

3. குஞ்சு பொரிக்கும் முட்டைகளை விநியோகித்தது.

4. அரசாங்க இலாகாவின் குஞ்சு பொரிக்கும் இங்குபேட்டர் கருவிகளின் தொகையை கூட்டினது. இந்தச் சந்தர்ப்பத்தில் இருபதாயிரம் முட்டைகள்வரை குஞ்சு பொரிக்கக்கூடிய 23 இங்கு பேட்டர்கள் சமீபத்தில் இலங்கை வந்து சேர்ந்தன. இவை அனைத்தும் குண்டசாலை அரசாங்க கோழிப் பண்ணையில் வைக்கப்படுகின்றன.

### வான் கோழி, தாரா

கோழி வளர்ப்புத் தவிர, வான்கோழி, தாரா வளர்ப்பும் பரந்த அடிப்படையில் விரைவில் மேற்கொள்ளப்பட விருக்கின்றன. இப்போது வான்கோழி வளர்ப்பும் தாரா வளர்ப்பும் கொழும்பைச் சுற்றியுள்ள பகுதிகளில் தான் பெரும் பாலும் மேற்கொள்ளப்படுகின்றன. இதுவும் ஏதோ வீட்டுத் தோட்டங்களில் சிறிய அளவில்.

கால் நடை அபிவிருத்தி பால் பண்ணைத் தொழில் திட்டம், பன்றி, ஆடு வளர்ப்புக்கும் முக்கியத்துவம் கொடுத்திருக்கிறது.

### பன்றி வளர்ப்பு

பன்றி வளர்ப்பு மிகவும் லாபகரமான ஒரு தொழில், இதற்கு சிறு மூலதனம் போதுமானது. நிர்வாகம், உணவளித்தல் ஆகியனவும் சுலபமாகவும் குறைந்த செலவிலும் நடைபெறும். ஆகவே பன்றி வளர்ப்பை விஸ்தரிப்பதை அரசாங்கம் ஆமோதித்து உற்சாகப்படுத்த முனைந்துள்ளது.

வெலிசறையில் அரசாங்கம் பன்றிப் பண்ணை ஒன்றை நடத்தி வருகிறது. பன்றி வளர்ப்புக்குத் தேவையான பொருட்களையும் பன்றிக் குட்டிகளையும், பன்றி வளர்ப்பில் ஈடுபட விரும்புபவர்களுக்கு அரசாங்கம் இந்தப் பண்ணையிலிருந்து கொடுத்து உதவி வருகிறது.

### ஆடு வளர்ப்பு

ஆடு வளர்ப்பைப் பொறுத்தவரையில் மந்த நிலை இருந்துவந்தது. அதனால் ஆடுகளும் ஆட்டிறைச்சியும் சுமார் 19 லட்சம் ரூபா பெறுமதியானவை வருடமொன்றில் வெளி நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டுள்ளன. இந்த நிலைமையைத் தவிர்க்க அரசாங்கம் ஆடு வளர்ப்புப் பண்ணைகளைத் துவக்கி இருக்கிறது. பொருத்தமான இடங்களில் பண்ணைகளைத் திறக்கத் திட்ட மிடப்பட்டிருக்கிறது.

(கல்லோயாச் செய்தி)

# புற்று நோய்

**1. புற்றுநோய் என்பது யாது ?**

உடலிலுள்ள இழையங்களினது உயிரணுக்களின் ஒழுங்கற்ற வளர்ச்சியே, புற்றுநோயாகும். வழமையான உயிரணுக்களின் வளர்ச்சியைக் கட்டுப்படுத்தும் விதிகளுக்கு இது கட்டுப்படமாட்டாது. இதனை அழிக்காவிட்டால் அல்லது அகற்றுவிட்டால், முடிவில் மரணம் விளைக்கும்.

**2. புற்றுநோயானது ஒட்டுவாரொட்டி நோயா அல்லது தொற்றுநோயா ?**

புற்றுநோயானது கிருமியால் உண்டாவதில்லையாதலால் இது ஒட்டுவாரொட்டி நோயோ அன்றித் தொற்று நோயோ அல்ல. புற்று நோயாளிகளுடன் அன்யோன்னியமாகப் பழகிய எந்த வைத்தியருக்கோ அன்றி எந்தத் தாதிகோ இந்நோய் ஏற்பட்டதாக எந்த வைத்திய சாத்திரத்திலும் காணப்படவில்லை. இதற்கு வேறு சான்றும் வேண்டுமோ !

**3. புற்றுநோயானது உடம்புக்குள் எவ்வாறு பரவுகிறது ?**

இந்நோய் மூன்று வழிகளில் பரவுகிறது (1) புற்றுநோய் அணுக்கள் இரத்தக் குளாய்களின் சுவர்களினூடாக வளர்ந்து, உடம்பின் பல்வேறு பாகங்களுக்கும் இரத்தத்தின் மூலம் எடுத்துச் செல்லப்படுகின்றன. (2) இதேபோல, மேதாவாகினி நீருடனும் கலந்து, அருகிலுள்ள மேதாவாகினிச் சுரப்பிகளுக்கும் இவை எடுத்துச் செல்லப்படுகின்றன. (3) புற்றுநோய் அணுக்கள் ஒரு இழையத்திலிருந்து மற்றொரு இழையத்துக்கு நேரடியாகவும் வளருகின்றன.

**4. வளர்ச்சியொன்று புற்றுநோய்தானென்று நாங்கள் எப்படிச் சொல்ல முடியும் ?**

சந்தேகப்படும் இழையத்தின் ஒரு சிறு பாகத்தை நுணுக்குக்காட்டி (பூதக்கண்ணாடி)யில் வைத்துச் செய்யும் நோயியல் பரிசோதனையின் மூலம் இதனைச் சொல்ல முடியும். நோய் முற்றிய கட்டத்திலுள்ள நோயாளியொருவரைத் தேகப் பரிசோதனை செய்தாலே போதும் இந்த நோயைக் கண்டு பிடித்து விடலாம். எனினும், இம்முறை சாத்தியப்படுங்கால், அனேகமாக, நோய் குணமாகும் என்று நம்ப முடியாத அளவுக்கு முதிர்ந்து விடுவதுண்டு.

## இதனை உண்டுபண்ணுவது யாது ?

**5. புற்றுநோயை உண்டுபண்ணுவது யாது ?**

இதற்குரிய முக்கிய காரணம் தெரியவில்லை. இதற்குப் பல காரணிகளுண்டு. ஆனால் இவற்றில் பொதுவானதொரு காரணி, ஏதோவொரு விதமான தீராத அல்லது நாட்பட்ட அழற்சியேயாகும். இந்த அழற்சியில் பலவகையுண்டு. அவை : ரசாயன ரீதியானது ; வெப்பம் காரணமானது ; சட சம்பந்தமான உரசல் காரணமானது.

**6. சூடான உணவுகளை உண்பதனால் புற்றுநோய் உண்டாகிறதா ?**

புற்றுநோய் விருத்தியாவதற்கு உணவுகளின் வெப்பநிலையும் ஒரு முக்கிய காரணம் என்பதற்கு அதிக சான்று இல்லை.

**7. புற்றுநோயானது மனிதனின் பரம்பரை நோயா ?**

பல்வேறு வகையான புற்றுநோய்கள் ஏற்படுதற்குப் பரம்பரைச் சார்புகள் உண்டென நம்பப்படுகின்றது. எனினும், அச்சார்புகள் வழி வழியாக வரும் முறை தெளிவற்றதாகவும் சிக்கலானதாகவும் இருப்பதால் ஒருவர், தமது பெற்றோர் இருவருக்கேனும் ஒரு வருக்கேனும் புற்றுநோய் இருந்ததை, சந்தேகிக்கத்தக்க நிலைமைகளை கண்ணுங்கருத்துமாயிருந்து கண்டு பிடித்தற்கான ஒரு காரணமாகமட்டும் கொண்டால் போதுமானது. இவற்றை முன்னிட்டு பீதியடையவோ அல்லது விதிவசமென்றெண்ணவோ முகாந்திரமில்லை.

**8. புகைத்தல், புற்றுநோயை உண்டு பண்ணுமா ?**

சமீப காலத்திய பரிசோதனைகள், அமோகமாக சிகரெற் புகைத்தலுக்கும் சுவாசப்பையைப் புற்றுநோய்க்கும் புள்ளிவிபர ரீதியில் தொடர்பு காட்டியுள்ளன. எனினும், இத்தொடர்பு, இந்நோய்க்கான காரணங்களிலொன்று என்பதை விஞ்ஞானிகள் இன்னும் ருசுப்படுத்தவில்லை. எனவே, நீங்கள் புகைப்பதாயின், அளவோடு புகைப்பது சாலச் சிறந்தது.

**9. புற்றுநோயிலிருந்து தற்காத்துக் கொள்வதெங்ஙனம் ?**

உடலின் எப்பாகத்திலேனும் நெடுநாளைய அழற்சியை சாத்தியமான வரை தடுத்தல் வேண்டும். குறிப்பாக வெய்யிலும் காற்றும் மிதமிஞ்சிய

(3 ம் பக்கம் பார்க்க)

## அரசாங்கத் தொழிற் பகுதி

(முற்றொடர்)

# படகு சேவை

**படகுச் சேவை**

பூகொடை—ஹன்வெலையிலுள்ள படகுச்சேவைக் கூட்டுறவுத் தொழிற் சபைகள் திருப்திகரமாக வேலைசெய்துவருகின்றன. ஹன்வெலை ஆற்றின்மீது பாலம் அமைக்கும் வேலை முடிவடைந்தவுடன் இச்சேவை நின்றுவிடும்.

**நிதிகள்**

கூட்டுறவுத் தொழிற்சபைகள் வேலை ஒப்புக்கொள்வதற்குத் தொழிற் பகுதி முன்பணங்களை வழங்கியுள்ளது. சென்ற ஆண்டில் ரூபா 358,482 கடனுகக் கொடுக்கப்பட்டது. சபைகளிற் பெரும்பான்மை யானவை தாம் பெற்ற கடன்களை விரைவாகத் திருப்பிக்கொடுத்து வருகின்றன. மற்றும் சில சபைகள் தாம்செய்த வேலைக்கு அரசாங்கப்பகுதிகள் செலுத்தவேண்டிய பணத்தை அறவிடுவதைத் தாமதித்து வருகின்றன. அதன் விளைவாகத் தொழிற்பகுதியின் கடன்களைத் திருப்பிக்கொடுப்பதையும் தாமதிக்க நேரிடுகிறது.

**ஊழியர்**

தொழில் நுட்ப உத்தியோகத்தர் நால்வர் இச்சபைகளின் வேலையை மேற்பார்வைசெய்துவருகின்றனர். மேற்பார்வை செய்தற்கு உத்தியோகத்தர் போதாமையால், இச்சபைகளது வேலையின் தரம் அதிக அளவுக்குப் பாதிக்கப்பட்டுள்ளது. கூடுதலான தொழில் நுட்ப உத்தியோகத்தர் வேலைக்கமர்த்தப்படின், இச்சபைகள் தமது நடவடிக்கைகளை விருத்திசெய்யக்கூடியதாயிருக்கும்.

**பயிற்சித்திட்டங்கள்**

தொழிலுக்கு ஆட்களைப் பயிற்றும் பொறுப்பு சுமத்தப்பட்டுள்ள தொழிற் பகுதி தொழிலாளர் கிடைப்பதரிதாகவுள்ள சில இனத்திறன்களில் ஆட்களைப் பயிற்றுதற்கும், இத்தேசத்தின் அபிவிருத்தித் திட்டங்களில் விளைவாக அத்தகைய தொழிலாளர் தேவைப்பட்டனரென அல்லது தேவைப்படலாமெனக் கருதுமிடத்து ஆட்களைப் பயிற்றுதற்கும் திட்டங்களை வகுத்துள்ளது. தெரிவு செய்யப்பட்ட, வயதுவந்த வேலையாளருக்கே பெரும்பாலும் பயிற்சியளிக்கப்படுகிறது. சில திறன்களில் இவர்களைப் பயிற்றி வேலையிலமரும் வசதிகளை அதிகரிக்கும் பொருட்டே இவ்வண்ணம் பயிற்சியளிக்கப்படுகிறது. இப்பொழுது தொழில் நுட்ப உத்தியோகத்தரின் தரத்திற்குட்பட்டவர்களே இந்நிலையங்களில் பயிற்றப்படுகின்றனர். குறித்த தொழிலாளருக்குத் தீவிரமான செயன்முறைப் பயிற்சி சிறிது காலத்திற்கு அளிக்கப்படுகிறது.

இது வரை இப்பகுதி 2,922 பேரைப் பல்வேறு திறன்களிற் பயிற்றியுள்ளது. இவர்களில் 2,334 பேர் வேலையிலமர்ந்துள்ளனரெனப் பதிவேடுகள்மூலம் தெரிகிறது. இப்பொழுது 412 பேர் பின்வரும் 14 பல்வேறினதிறன்களிற் பயிற்சிபெற்று வருகின்றனர் :—

தச்சர், மேசன்மார், நாவிதர், தோட்ட வேலையாளர், வீட்டு வேலையாளர், கள்ளுச்சீவுவோர், தோலைச் சுத்தஞ் செய்வோர், ஒலிபரப்பு கருவி செப்பனிடுவோர், மின்கம்பி வேலையாளர், இழுவைவாகனம் செலுத்துவோர், பொறித்தொழிலாளர், வரைவாளர், படியெடுப்பவர், தகரவேலையாளர், பற்றவைப்போர், பொருத்துவோர்.

கொழும்பில் தாபிக்கப்பட்டு, கனம் பிரதம மந்திரி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவால் 1962 ம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 5 ந் தேதியன்று ஒப்பாசாரப்படி திறந்துவைக்கப்பட்ட மத்திய தொழின் முறைப் பயிற்சி, தொழிற் சோதனை நிலையத்தில் 64 பேர் இப்பொழுது பயிற்சி பெற்றுவருகின்றனர். இவர்களுக்குப் பற்றவைத்தல், பொருத்துதல், மின்கம்பிவேலை, ஒலிபரப்புக்கருவி பழுதுபார்த்தல் ஆகிய திறன்களிற் பயிற்சியளிக்கப்பட்டுவருகிறது. தகட்டு உலோக வேலை, பொறிவேலை, மோட்டார் இயந்திர வேலை ஆகிய மற்றும் மூன்று தொழில் பயிற்சி சிறிது காலத்தில் ஆரம்பிக்கப்படும். நாளடையில் 112 பேர் இந்நிலையத்திற் பயிற்சிபெறுவர். இந்நிலையம் பயிற்சியளித்தற்குச் சகல வசதிகளையுமுடையது. இதன் போதனுசிரியர்கள் போதிக்கும் நுட்பத்தில் இந்தியாவில் விசேட பயிற்சி பெற்றவர்களாவர். கிராக்கி எற்படும் மற்றும் பல தொழில்களையும் உட்படுத்தி இந்நிலையத்தின் பயிற்சி நடவடிக்கைகள் விஸ்தரிக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது. தொழில்களிற் சோதனை நடத்தித் தொழிற் தேர்வுடையோருக்குத் தொழிற் பத்திரங்களை வழங்குதற்குக் கூடியவிரைவில் கூறுகள் நிறுவப்படும்.

இதுவரை இப்பகுதி சிறுதொகையினரைக் கள்ளுச்சீவுந் தொழிலாளராகப் பயிற்றியது. இப்பொழுது கள்ளுச்சீவுவோர் பெருந் தொகையினர் தேவைபடுவதால், பல்வேறு இடங்களிற் பயிற்சி நிலையங்களையமைக்க நடவடிக்கையெடுக்கப்பட்டுவருகிறது.

அடுத்த ஆண்டிற் பயிற்சித்திட்டத்தின் போக்கையும் தீவிரத்தையும் விசாலித்தற்கு இப்பகுதி உறுதியான முயற்சியெடுத்துவருகிறது.

**மற்றும் நடவடிக்கை**

**கட்டணம் விதிக்கும் தொழில் இணைத் தாபனச்சட்டம்**

தொழிலிணைத்தாபனங்கள் வீட்டு வேலைக்காரரை ஒழுங்குசெய்தற்கு விதிக்கும் கட்டணங்களைக் கட்டுப்படுத்தும் பொருட்டும், வேலையாட்களுக்கு, வேலை தேடிக்கொடுத்தற்கு விதிக்கும் கட்டணங்களை ஒழுங்குபடுத்தும் பொருட்டும் 1962 ம் ஆண்டு ஜூன் மாதத்தில் இச்சட்டத்திற்குட்பட்ட ஒழுங்குவிதிகளை அரசாங்கம் திருத்தியமைத்தது.

**மந்திரிசபையின் உப-சபை**

கனம் நிதி மந்திரி, கனம் கைத்தொழில், உள்நாட்டு, காலச்சார, விவகார அமைச்சர், கனம் விவசாய, காணி, நீர்ப்பாசன, சக்தி அமைச்சர், கனம் வர்த்தக, வியாபார, உணவு, கப்பற்போக்குவரத்து அமைச்சர் ஆகியோரை அங்கத்தவர்களாயும், கனம் தொழில், தேசீயமய சேவை அமைச்சரைத் தலைவராயும் கொண்ட இம் மந்திரி சபையின் உபசபை வேலையற்றோர் பிரச்சினையைத் தீர்த்தற்கான வழிவகைகளை ஆலோசிக்கும்பொருட்டு சமீபகாலத்தில் ஒழுங்காகக் கூட்டங்களை நடத்தியது. மந்திரிசபையின் உபசபையினது கவனத்தைக் கவர்ந்துள்ள மற்றுமொரு விடயம் அரசாங்கத்தின் இறக்குமதிக் கட்டுப்பாட்டுக் கொள்கையின் விளைவாகச் சில வர்த்தகத்தாபனங்களின் ஆட்குறைப்புப் பிரச்சினையாகும். அத்தகைய ஆட்குறைப்பு நடைபெறுவதைத் தடுப்பதற்கு இவ்வுபசபை பல்வேறு நடவடிக்கைகளையெடுத்துள்ளது.

**தொழிற்சங்கங்கள்**

இப்பொழுது ஏறக்குறைய 1,000 பதிவுசெய்யப்பட்ட தொழிற்சங்கங்களுள. இவற்றுள் ஏறக்குறைய 600 அரசாங் ஊழியரின் சங்கங்களாகும். தொழிலாளரின் இலட்சியத்தில் அனுதாபமுடைய அரசாங்கமொன்றின் உதவியை பெற்றுள்ள இச்சங்கங்கள் தொழிலுறவுத் துறையில் மதித்தற்குரிய ஒரு சக்தியாக அமைந்துள்ளன. எனினும், சில தொழிற்சங்கங்களிடேயே பிளவுபடும் மனப்பான்மை காணப்படுவது விசனிக்கத்தக்கதாகும். இத்தகைய மனப்பான்மையால், பொதுவாக, தொழிற் சங்க இயக்கம் வலியிழக்க ஏதுவாகும்.

**தொழிற்சாலைச் சட்டம்**

(128 ம் அத்தியாயமாகிய) தொழிற்சாலைச் சட்டத்தை நடைமுறைக்குக் கொண்டுவரும் பொறுப்பு தொழிற் பகுதியின் தொழிற்சாலைப் பிரிவைச் சார்ந்ததாகும். இச்சட்டம் இலங்கையின் தொழிற்சாலைகளில் வேலைபார்க்கும் தொழிலாளரின் பாதுகாப்பு, சுகாதாரம், நல்வாழ்வு ஆகியவற்றை ஒழுங்குசெய்வதாகும்.

2. பதிவுசெய்யப்பட்ட 6,500 தொழிற்சாலைகள் இப்பொழுதுள. இவற்றுள் ஏறக்குறைய 1,000 தொழிற்சாலைகள் ஆண்டுக்கொரு முறையாவது பார்வையிடப்படுகின்றன. போதிய தொகை உத்தியோகத்தரில்லாமையால் இப்பிரிவின் வேலை பெரிதும் பதிக்கப்பட்டுள்ளது. இத்தேசத்திற் பொறிவலாளர் மிகக்குறைவாயிருப்பதால் தொழிற்சாலைப் பார்வையாளரைத் தெரிவு செய்து, சேவையில் வைத்திருப்பதிற் கஷ்டங்கள் நேர்ந்துள்ளன. இப்பிரிவிலுள்ள சிறுதொகை உத்தியோகத்தருடன் அதன்வேலை ஓரளவுக்குக் கவனிக்கப்பட்டது. பார்வையிடப்பட்ட ஒரு சில தொழிற்சாலைகளில் அடிப்படைப் பாதுகாப்பு, சுகாதார, நல்வாழ்வு ஏற்பாடுகளை அமுல் நடத்துவதிலும் மரண விபத்துக்களையும் மற்றும் மோசமான விபத்துக்களையும் ஆராய்வதிலும் இப்பிரிவின் உத்தியோகத்தர் ஈடுபட்டனர்.

3. இத்தேசத்திற் பல்வேறு தொழில்களை ஆரம்பிக்கும் வேலை மேற்கொள்ளப்பட்டு மேலும் மேலும் அதிக தொழிற்சாலைகள் அமைக்கப்படுவருவதனுல், போதிக்கும் வேலைக்கும் பிரசார வேலைக்கும் கூடுதலான கவனஞ்செலுத்தப்பட்டுவருகிறது. பிரதான தொழிற்சாலைப் பார்வையாளர் காரியாலயத்திலுள்ள பாதுகாப்பு நிலையம் படிப்படியாக விசாரிக்கப்பட்டுவருகிறது.

4. பாதுகாப்பு, சுகாதாரம், நல்வாழ்வு ஆகியவற்றை விருத்தி செய்யும் வேலையை அசாங்கம் மட்டும் கவனிப்பதற்கு விட்டுவிடுதலாகாது. எல்லோரினது நலனையும் உத்தேசித்து, தனியார்துறையில் முதலாளிகள், ஊழியர், வீமாக்கொம்பெனிகள் ஆகியோரும் மற்றும் சுயேச்சைத்தாபனங்களும் ஒத்துழைத்து தொழிட் பாதுகாப்பையும் தொழிற்சாலை நல்வாழ்வையும் விருத்திசெய்தல் வேண்டும். சட்ட நியாயத்திற்காக மட்டுமன்றி, சமூக, பொருளாதார நியாயங்களுக்காகவும் இதைச் செய்தல் வேண்டுமென்பது நன்குதெரிந்த விடயமாகும்.

## சௌக்கிய வாரச்....

(1 ம் பக்கத் தொடர்)

கறிவோம். சுத்தம் செய்யும் இயக்கங்களை அமைப்பதற்கு மனித சக்திகள் அனைத்தையும் ஒன்று திரட்டிச் செயலாற்றுவது இப் பிரதேசங்களிலுள்ள மக்கள் சௌக்கிய வாரக் குழுக்களின் ஒரு பிரதான பொறுப்பாகும். இம்முயற்சியில் ஒருவருக்கொருவர் உதவி செய்ய ஆரம்பித்தால் வருட முழுவதிலும் இதனைத் தொடர்ந்து செய்ய முடியும்.

முடிவாக, புதிய சௌக்கிய அமைச்சர் என்ற முறையில் தங்கள் சௌக்கிய வாரக் கொண்டாட்டங்களில் சகல வெற்றிகளையும் மக்கள் சௌக்கிய வாரக்குழுக்கள் ஈட்ட வேண்டுமென்று ஆசி கூற விரும்புகின்றேன். இவ்வருடக் கொண்டாட்டங்களை அங்குரார்ப்பணஞ் செய்து வைப்பதில் மட்டற்ற மகிழ்ச்சி, எனக்கு.

## புற்று நோய்....

(2 ம் பக்கத் தொடர்ச்சி)

படாது பாதுகாத்துக்கொள்ள வேண்டும். பிரசவத்தின்போது கருப்பையில் உண்டாகும் எல்லாக் காயங்களையும் உடனடியாகச் சீர் செய்து கொள்ள வேண்டும் ; மூலைகளை இயல்பாகத் தொழிற்பட விட வேண்டும் ; நீக்கற் பற்களைச் சீர்ப்படுத்திக்கொள்ள வேண்டும் ; நன்கு பொருந்தாத போலிப் பல் வரிசைத் தகடுகளைத் தவிர்க்க வேண்டும் ; புகையிலை உபயோகிப்பதில் தன்னடக்கம் வேண்டும், தீராத மலச்சிக்கலைச் சீர்ப்படுத்திக்கொள்ள வேண்டும். சுருங்கக் கூறின், எந்த இழையத்தையும் அனுவசியமாக துஷ்பிரயோகம் செய்தலைத் தவிர்த்தல், புற்று நோய் உண்டாகாமல் பாதுகாத்துக் கொள்வதற்குதவும் பகுத்தறிவு முறையாகும்.

**புற்று நோயிலிருந்து உங்களைப் பாதுகாத்துக்கொளுதல்**

**10. வாயில் வரும் புற்றுநோயைத் தவிர்த்துக் கொள்வதற்கு என்ன முற்காப்புகளை மேற்கொள்ள வேண்டும் ?**

(அ) வாயைச் சுத்தமாக வைத்திருக்கவும். நீக்கற் பற்களைச் சீர் செய்து கொள்க ; அல்லது அகற்றிவிடுக. முரசில் (பல்லீறு) காயத்தை யுண்டு பண்ணக்கூடிய நன்கு பொருந்தாத போலிப்பல் வரிசைத்தகட்டை உபயோகிக்காதீர். வாயில் அல்லது நாக்கில் வெள்ளைப்புள்ளிகள் தென்பட்டால், புகையிலை உபயோகிப்பதை நிறுத்தி உடனே ஒரு வைத்தியரிடம் செல்க.

(ஆ) வெற்றிலை சப்பும்போது புகையிலையையும் சுண்ணும்பையும் தவிர்த்துக் கொள்க. மிதமிஞ்சி வெற்றிலை சப்பாதீர்.

**11. சருமத்தில் வரும் புற்றுநோயைத் தவிர்த்துக்கொள்வதற்கு என்ன முற்காப்புகளை மேற்கொள்ள வேண்டும் ?**

கருநிற மறுக்களும் மச்சங்களும் அழற்சியை உண்டு பண்ணுமாயின், அவை அகற்றப்பட வேண்டும். சருமத்திலுள்ள சொறியும் தடித்த இடங்கள் புண்ணுவதற்கு முன்பு சிகிச்சை யளிக்கப்பட வேண்டும். விசேடமாக, சிவந்த சருமமுடையோர் சூரிய கிரணங்கள் நேரடியாக மிதமிஞ்சிப்படுவதைத் தவிர்க்க வேண்டும். உதட்டில் திரும்பத் திரும்ப வரும் காய்ச்சற் கொப்புளங்கள் கவனமாகப் பரிசோதனை செய்யப்பட வேண்டும். சருமத்தை எப்போதும் சுத்தமாக வைத்திருக்கவும்.

(தொடரும்)

# இலங்கை வானொலி நிகழ்ச்சிகள்

**12·6·63 தொடக்கம் 16·6·63 வரை**

### புதன்
**ஜூன் 12**

காலை

6 45 பாமாலை—
6 55 இஸ்லாமிய நற்சிந்தனை—எ. எம். காமில் மரிக்கார்
7 0 செய்திகள்
7 10 அறிவிப்புகள்
7 15 மூவர் இசை
7 45 திரை இசை
8 15 இஸ்லாமிய கீதம் †
8 30 ஒலிபரப்பு முடிவு

பகல்

12 00 சித்ரகானம்
12 45 செய்திகள்
12 55 அறிவிப்புகள்
1 00 கதம்ப இசை
1 30 ஒலிபரப்பு முடிவு

மாலை

5 00 **சிறுவர் பகுதி—**
பிறந்த தின வாழ்த்துக்கள்
5 15 நிலைய ஒலிப்பதிவுகள் ‡
5 45 திரை இசை
6 00 செய்திகள்
6 10 விலை வாசிகள்
6 15 **கிராம சஞ்சிகை—**
பஞ்சவனம்—தொடர் நாடகம்
நாட்டுப் பாடல்
6 45 கிளாரினட்
7 00 நேயர் விருப்பம்
7 30 வயலின்—
எஸ். சோமாஸ்கந்தசர்மா
8 00 **முஸ்லிம் நிகழ்ச்சி—**
மாதர் மஜ்லிஸ், தயாரிப்பு : ஹம்ஸா ஆரிப்
8 30 பேச்சு—
முஸ்லிம் மாணவர்க்கான இலக்கியங்கள்—“ புதுகுஷ்ஷாம் ”—2.
8 45 பாட்டு—
எம். எ. ஹஸன் அலியார்
9 00 செய்திகள்
9 10 அறிவிப்புகள்
9 15 விவாத மேடை
“ சனத்தொகைப் பெருக்கமும் பொருளாதார விருத்தியும் ”
9 45 தொகுப்பிசை
10 30 ஒலிபரப்பு முடிவு

† இசைத்தட்டு

### வியாழன்
**ஜூன் 13**

காலை

6 45 உதய கீதம்—
மரிக்கார்
6 50 சைவ நற்சிந்தனை—மு. வயிரவப்பிள்ளை
6 55 இஸ்லாமிய நற்சிந்தனை—எ. எம். காமில் மரிக்கார்
7 00 செய்திகள்
7 10 அறிவிப்புகள்
7 15 தேர்ந்த இசை ‡
7 45 திரை இசை †
8 15 இஸ்லாமிய கீதம் †
8 30 ஒலிபரப்பு முடிவு

பகல்

12 00 சித்ரகானம் †
12 45 செய்திகள்
12 55 அறிவிப்புகள்
1 00 கதம்ப இசை †
1 30 ஒலிபரப்பு முடிவு

மாலை

5 00 **சிறுவர் பகுதி—**
பிறந்ததின வாழ்த்துக்கள்
5 15 ஓடிவிளையாடு பாப்பா—பாலர் நிகழ்ச்சி
5 45 திரை இசை
6 00 செய்திகள்
6 10 விலை வாசிகள்
6 15 **கிராம சஞ்சிகை—**
உணவுப்பெருக்கம்
6 45 வாத்யகோஷ்டி
7 00 பேச்சு—“ இரகுவம்சம் ” 11.5.63 ல் ஒலிபரப்பிய பேச்சின் மறுஒலிபரப்பு
7 15 நேயர் விருப்பம்†
7 15 தொடர் நாடகம்—“ **மனோரஞ்சிதம்** ” 19 ம் இதழ் “ **நோயாளியும் விருந்தாளியும்** ”—“ கிருஷ்ணா ” எழுதியது
8 05 **முஸ்லிம் நிகழ்ச்சி**—கிராஅத்†
8 15 **திருக் குர்ஆன் விளக்கம் :** மௌலவி என். எம். மீராமுஹிதீன் ஆலிம்.
8 40 பாட்டு—எம். எம். இப்ருஹீம் லெப்பை
9 00 செய்திகள்
9 10 அறிவிப்புகள்
9 15 லயவின்யாசம்
எ. கணேச சர்மா—மிருதங்கம்
9 30 குரல்வகை†
10 00 **தமிழோசை**—பி. பி ஸி. நிலையத்திலிருந்து ஒலிபரப்பப்பட்ட நிகழ்ச்சிகளின் ஒலிப்பதிவு

### வெள்ளி
**ஜூன் 14**

மாலை

6 45 பாமாலை—
6 55 இஸ்லாமிய நற்சிந்தனை—எ. எம். காமில் மரிக்கார்
7 00 செய்திகள்
7 10 அறிவிப்புகள்
7 15 தோத்திரப் பாடல்கள்—சி. செல்லத்துரை
7 45 திரை இசை†
8 15 இஸ்லாமிய கீதம் †
8 30 ஒலிபரப்பு முடிவு

பகல்

12 00 சித்ரகானம்†
12 45 செய்திகள்
12 55 அறிவிப்புகள்
1 00 கதம்ப இசை†
1 30 ஒலிபரப்பு முடிவு

மாலை

5 00 **சிறுவர் பகுதி—**
பிறந்ததின வாழ்த்துக்கள்
5 15 நாதசுரம்†
6 00 செய்திகள்
6 10 விலைவாசிகள்
6 15 **கிராம சஞ்சிகை**—தேச வளம், யுனெஸ்கோ சித்திரம்
6 45 வீணை—
7 00 **ஞானஞ்சலி—**
7 30 நேயர் விருப்பம்
8 00 **முஸ்லிம் நிகழ்ச்சி—**
உறுதுப் பாடல்கள்†
8 15 நாடகம்—“ **யாருக்கு லாபம்** ”—
அங்கம் ஒன்று ஆர். எஸ். ஸைபுத்தீன் சாஹிப் எழுதியது
8 45 இஸ்லாமிய கீதம்†
9 00 செய்திகள்
9 10 அறிவிப்புகள்
9 15 விமர்சனம்
9 30 கதாப் பிரசங்கம்—ஆர். வடிவேலு
10 15 இசையமுதம்†
10 30 ஒலிபரப்பு முடிவு

‡ நிலைய ஒலிப்பதிவு

### சனி
**ஜூன் 15**

காலை

6 45 உதயகீதம்‡
6 50 சைவ நற்சிந்தனை—
மு. வயிரவப்பிள்ளை
6 55 கிறிஸ்தவ நற்சிந்தனை—எ. இராமநாதன்
7 00 செய்திகள்
7 10 அறிவிப்புகள்
7 15 மூவர் இசை†
7 45 திரை இசை†
8 15 இஸ்லாமிய கீதம்†
8 30 ஒலிபரப்பு முடிவு

பகல்

12 00 சித்ரகானம்†
12-45 செய்திகள்
12-55 அறிவிப்புகள்
1-00 கதம்ப இசை†
1-30 ஒலிபரப்பு முடிவு

மாலை

5-00 **சிறுவர் பகுதி—**
பிறந்ததின வாழ்த்துக்கள்
5-15 இளைஞர் மன்றம்—
5-45 திரை இசை
6-00 செய்திகள்
6-10 விலைவாசிகள்
6-15 **கிராம சஞ்சிகை**—சனசமூக நிலையம்
6-45 வயலின், வேலுப்பிள்ளை சிவஞானம்
7-15 **கண்டதும் கேட்டதும்**—செய்திச் சுருள்
7-30 நேயர் விருப்பம்
8-00 **முஸ்லிம் நிகழ்ச்சி**—“ வாரீர் மலாயீர் ”—மலாய்ப் பேச்சு—எம். அமீன் அக்பர்
8-15 பேச்சு—“ ஜும்ஆத் தொழுகையின் சிறப்பு ” —2. மவுலவி கே. எம். ஐ. ஜமால்தீன்
8-30 பாட்டு—மஸாஹிரா இல்யாஸ்
8-45 ஹிந்துஸ்தானி சங்கீதம்†
9-00 செய்திகள்
9-10 அறிவிப்புகள்
9-15 பேச்சு—“ இரகுவம்சம் ”—2. மீனாட்சி பொன்னுத்துரை
9-30 பாட்டு—விஜயலக்ஷ்மி குமாரசாமி
10-30 ஒலிபரப்பு முடிவு

### அறிவித்தல்

வாசகர்கள் படங்கள் அனுப்பும்போது, வெளியீட்டுப் பதிப்பாசிரியர், **இலங்கை வானொலி நிலையம், தபால் பெட்டி 574, கொழும்பு என்ற விலாசத்திற்கு அனுப்பவும்.** தயவு செய்து மா அதிகாரிக்கு விலாசமிட வேண்டாமென்று கேட்டுக் கொள்ளுகிறோம்.

★ ★ ★

### ஞாயிறு
**ஜூன் 16**

காலை

6 45 பாமாலை
6 55 கிறிஸ்தவ நற்சிந்தனை—
எ. இராமநாதன்
7 00 செய்திகள்
7 10 அறிவிப்புகள்
7 15 தேர்ந்த இசை
7 45 திரை இசை†
8 15 தமிழ் மூலம் சிங்களம்-என். டி. பீரிஸ்
8 30 **ஞானஞ்சலி**—(மறுஒலிபரப்பு)
9 00 இஸ்லாமிய சமய பாடசாலை—
நடத்துபவர் : மவுலவி ஏ. அப்துர் றஹ்மான்
9 30 திரை இசை
10 00 ஒலிபரப்பு முடிவு
11 30 சிறுவர் மலர்—தயாரிப்பு, வானொலி மாமா
12 15 நேயர் விருப்பம்†
12 45 செய்திகள்
12 55 அறிவிப்புகள்
1 00 **மாதர் பகுதி—**
(1) சிறுகதை நாடகம்—2. குழந்தை வளர்ப்பு—பேச்சு ஷாஜஹானி புஹாரி
1 30 ஒலிபரப்பு முடிவு

மாலை

5 00 **சிறுவர் பகுதி—**
பிறந்ததின வாழ்த்துக்கள்
5 15 பாட்டு‡
5 45 திரைக்குரல்
6 00 செய்திகள்
6 10 குரல்வகை
6 30 தாள்வாத்தியக் கச்சேரி—என். ஆறுமுகம் பிள்ளை—மிருதங்கம்; வி. கணபதியா பிள்ளை—கஞ்சிரா; கே. கே. அச்சுதன்—கடம்
7 00 மாதர் கேட்டவை
7 30 பாட்டு—பாலம் லக்ஷ்மணன்
8 00 **முஸ்லிம் நிகழ்ச்சி**—மணிமொழிகள், மவுலவி எம். ஐ. அப்துல் லத்தீப்
8 15 மாணவர் மன்றம்—ஹபுகஸ்தலாவ முஸ்லிம் மஹா வித்தியாலயம்
8 30 விவரணச் சித்திரம்—“ **சமரசம்** ” எம். ஏ. எம். செல்லமரைக்கார் எழுதியது
9 00 செய்திகள்
9 10 அறிவிப்புகள்
9 15 நாடகம்—“ **காமினி** ”—
என். பி. ராசதுரை எழுதியது
9 45 நிலைய ஒலிப்பதிவுகள்
10 30 ஒலிபரப்பு முடிவு

# கடற்பூண்டுகளின் சிறப்பு

உலகில் அதிகரித்துவரும் ஜனத்தொகைக்கு உகந்த, சிறந்த உணவை விஞ்ஞானிகள் தளராது தேடி வருகின்றனர். அத்தகைய தேடுதலின் ஓர் அம்சமாக, உலகின் பல்வேறு பாகங்களிலும் உள்ள ரசாயன வல்லுநர்கள் கடற்பூண்டுகளின் பெருமையைக் கண்டறியத் தொடங்கியுள்ளனர்.

கடற்பூண்டுகளில் நேரடியாகப் பெறக்கூடிய பல உணவுப் பதார்த்தங்களும் உணவுப் பதார்த்தங்களைப் பதப்படுத்துவதற்கு அவசியமான மூலப் பொருட்களும் நிறைய உள்ளதாகக் கண்டுள்ளார்கள். கடற் பூண்டிலிருந்து எடுக்கப்படும் “ எகர் ” பதார்த்தம் சத்துமிக்க சுவைப் பொருளாகும். சூரிய வெப்பத்தில் உலர்த்தப்பட்ட கடற் பூண்டுகள் பசுக்களுக்குச் சிறந்த உணவு என்பதும், அதனால் அவை தரும் பால் அளவு பெருகும் எனவும் அறிந்துள்ளார்கள். பல்லாயிரக்கணக்கான வருடங்களாக, நிலத்தில் உள்ள பல தாதுப் பொருட்கள் கடலுக்குள் கழுவப்பட்டுப் போய்ச் சேர்ந்துள்ளன. அவற்றை மீண்டும் கடற்பூண்டுகள் மூலம் பெற முடிகிறதாம். எனவே கடற்பூண்டுகள் சிறந்த உரம் எனவும் கணிக்கப்பட்டுள்ளது.

இத்தகைய கண்டுபிடிப்புகள், கடற் பூண்டுகளைப்பற்றி மேலும் ஆராய்ச்சி நடத்துவதற்கும், கைத்தொழில், ரசாயன துறைகளுக்கு அவை எங்ஙனம் உதவும் என்பதை அறியவும் துணையாக இருந்தன.

முன்னேற்றம் அடைந்த நாடுகளில் பல்வேறு தரப்பட்ட பொருட்களின் உற்பத்திக்குக் கடற் பூண்டுகளைப் பயன்படுத்துகின்றனர்.

அத்தகைய முன்னேற்றம் இலங்கையில் இதுவரையில் ஏற்படாவிட்டாலும், கடற்பூண்டு ஏற்றுமதித் தொழில், சிறிய அளவில் என்றாலும் திறம்பட நடந்து வருகிறது. இப்போது யப்பானுக்குக் கடற்பூண்டு ஏற்றுமதி செய்யும் பிரதான நாடுகளில் ஒன்றாக இலங்கை திகழ்கிறது.

இலங்கைக் கடற் தொழில் ஆராய்ச்சிக் கழகம் நடத்திய அளவைகளின்படி கல்பிட்டி, திரிகோணமலை, மன்னார் ஆகிய பகுதிகளில் கடற்பூண்டுகள் பெருமளவில் கிடைக்கிறதாம்.

சிவப்பு நிறமுள்ள கடற் பூண்டுகளே ஏற்றுமதி செய்யப்படக் கூடியது என கடற்தொழிற் பகுதி விளக்கியுள்ளது. இந்தவகைக் கடற் பூண்டு திரிகோணமலைக் கடற்கரைகளில் பெருமளவில் காணப்படுகிறது. கடற்பூண்டுகளை கடலில் இருந்தே சேகரித்து, அவற்றில் உள்ள அழுக்குகளைப் போக்குதற்குக் கடல் நீரிலேயே அவற்றை நன்கு கழுவலாம். பின்னர் அவற்றை வெய்யிலில் இட்டு, அவற்றின் நிறம் மஞ்சளாக மாறும்வரை நன்கு உலர்த்த வேண்டும். இவ்வாறு நன்கு உலர்த்தப்பட்ட கடற்பூண்டுகளை 16-18 மாதங்களுக்கு வைத்திருக்கலாம். அதன் பின்னர் அவை கெட்டுப் போகலாம். உலர்த்திய கடற்பூண்டுகள் அந்தருக்கு பத்து ரூபா தொடக்கம் இருபது ரூபா வரை விற்கப்படலாம்.

உலர்ந்த கடற்பூண்டு ஏற்றுமதியைத் தவிர, கடற்பூண்டை அடிப்படையாகக் கொண்ட கைத்தொழில்களை, இந் நாட்டில் மேற்கொள்ளுதற்கும் சாத்தியக் கூறுகள் அநேகம் உள்ளன. இத்தகைய தொழில்களை ஆரம்பிக்குமாறு அரசாங்கம் தனியாரையும், ஸ்தாபனங்களையும் ஊக்குவித்துவருகிறது.

கடற்பூண்டுகளை ஏற்றுமதி செய்வதற்குப் பதிலாக, நன்கு பதப்படுத்தப்படாது “ எகர் ” பதார்த்தத்தை இலங்கையிலிருந்து ஏற்றுமதி செய்யுமாறும் அரசாங்கம் ஊக்குவிக்கிறது. இதற்கேற்ப, கடற்பூண்டிலிருந்து “ எகர் ” எடுப்பதற்கான சுலபமுறையையும் கடற்தொழில் ரசாயன ஆராய்ச்சியாளர் ஒருவர் கண்டு பிடித்துள்ளார்.

இலங்கை, வாழைச்சேனை ஈஸ்டேண் பேப்பர் மில்ஸ் கோப்பரேஷனால் உற்பத்திசெய்யப்பட்ட காகிதத்தில் இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

ஆ# 10138—5,008 (6/63)